## இனிமையான குழந்தைகளே! ஒவ்வொரு வீட்டையும் சொர்க்கமாக மாற்றுவதற்கான பொறுப்பு குழந்தைகளாகிய உங்களுக்கு உள்ளது. அனைவருக்கும் தூய்மை யின்மையிலிருந்து தூய்மையாவதற்கான இலட்சியத்தைக் கொடுக்க வேண்டும். தெய்வீக குணங்களை தாரணை செய்ய வேண்டும்.

கேள்வி: ஈஸ்வரிய மடியில் வருவதன் மூலம் குழந்தைகளாகிய உங்களுக்கு என்ன அனுபவம் ஏற்படுகின்றது?

பதில்: மங்களகரமான சந்திப்பின் அனுபவம் ஈஸ்வரிய மடியில் வருவதன் மூலம் ஏற்படுகின்றது. நீங்கள் அறிவீர்கள், சங்கமயுகமென்பது ஈஸ்வரனுடனான சந்திப்பைக் கொண்டாடுவதற்கான யுகம். நீங்கள் ஈஸ்வரனுடன் சந்திப்பைக் கொண்டாடி, பாரதத்தை சொர்க்கமாக மாற்றி விடுகின்றீர்கள். இச்சமயம் குழந்தைகளாகிய நீங்கள் நேருக்குநேர் சந்திக்கின்றீர்கள். முழுக் கல்பத்திலும் வேறு யாரும் நேருக்கு நேரான சந்திப்பைக் கொண்டாட முடியாது. இது உங்களுடைய மிகச் சிறிய ஈஸ்வரிய குலம். சிவபாபா தாத்தாவாக, பிரம்மா தந்தையாக இருக் கின்றனர், குழந்தைகளாகிய நீங்கள் சகோதர-சகோதரிகள். இது தவிர வேறு சம்மந்தம் எதுவும் இல்லை.

பாடல்: புதிய இளம் மொட்டுகள்.....

ஓம் சாந்தி. பாபா வரும் போது முதலில் சிறிது நேரம் அமைதியாக அமர வேண்டும். ஏனெனில் முதல்-முதலில் நினைவின் தானம் அளிக்கப்படுகின்றது. நினைவின் மூலம்தான் தூய்மை இழந்தவர்களை தூய்மை படுத்த வேண்டும். குழந்தைகளாகிய நீங்கள் தானம் கொடுக்கவும் செய்கிறீர்கள், பெறவும் செய்கிறீர்கள். பாபா வந்து முட்களிலிருந்து மொட்டுகளாக ஆக்குகின்றார். பிறகு மொட்டுகளிலிருந்து மலர்கள் உருவாகின்றன. நீங்கள் அறிவீர்கள், நம்முடைய சேவையே - நீங்கள் ஆகிக் கொண்டிருக்கிறீர்களே அதுபோல ஒவ்வொருவரையும் சொர்க்கத்திற்குத் தகுதி யுள்ளவர்களாக தயாராக்குவது.

பாபா வந்து முதலில் ஆரோக்கியம், பிறகு செல்வம் தருகின்றார். முதலில் சாந்தி, பிறகு சுகம். உண்மையில் சுகம் இரண்டிலும் உள்ளது. குழந்தைகளாகிய உங்களுக்கு சுகம், சாந்தி இரண்டும் வேண்டும். ஆனால் சந்நியாசிகள் முதலானோர் சாந்தி மட்டுமே விரும்புகின்றனர். சந்நியாசிகள் சுகத்தை விரும்புவதில்லை. சுகத்தையோ அவர்களால் தர இயலாது. சாந்தியைத் தந்தாலும் கூட அற்பகால சுகத்திற்காக மட்டுமே. சுகமோ காக்கையின் எச்சத்திற்கு சமமானது என்று சந்நியாசிகள் சொல்கின்றனர். சந்நியாசிகள் முக்திக்காகவே சாந்தியைப் பெரிதும் விரும்புகின்றனர். முக்தியை வேறு யாரும் தரவே முடியாது. இது எல்லையற்ற முக்தி, எல்லையற்ற ஜீவன்முக்தி எனப்படு கின்றது. அதையும் எல்லையற்ற தந்தை மட்டுமே தர இயலும். நீங்கள் அறிவீர்கள், இச்சமயம் அனைவரும் முட்களாக உள்ளனர். முட்கள் குத்தும். பாபா சொல்கின்றார், அனைவரும் ஒருவர் மற்றவரைக் காமக் கோடாரியால் இம்சிக்கின்றனர். காமக்கோடாரி ஒரு இம்சை என்பது அவர்களுக்குத் தெரியாது. நீங்கள் விகாரத்தில் போனால் முதல்-இடை-கடைசி வரை ஒருவர் மற்றவர்க்கு துக்கம் கொடுக்கின்றீர்கள். இவ்வுலகமே துக்கத்தின் உலகம். சொர்க்கமே

சுகத்தின் உலகம் எனப்படுகின்றது. அப்போது தான் புதிய சிருஷ்டி புதிய பாரதம் இருக்கின்றது. தேவி-தேவதைகளின் பூஜாரிகளாக உள்ள பாரதவாசிகளுக்கு இந்த தேவி-தேவதைகளின் இராஜ்யம் இருந்தது, அதுவே சொர்க்கம் என்று சொல்லப்படுகின்றது என்பது தெரியும். இந்தப் புரிந்து கொள்ளுதலும் அவர்களுக்கு வருகின்றது. லட்சுமி-நாராயணரின் கோயிலுக்குச் சென்று அவர் களுக்கு மகிமை பாடுகின்றனர். அவர்கள் பாரதத்தின் எஜமானராக இருந்தனர் என்பதைப் புரிந்து கொண்டுள்ளனர். பாரதம் சொர்க்கமாக இருந்தது என்பதையும் புரிந்துள்ளனர், ஆனால் அது காற்றைப் போல மறைந்து விட்டது. லட்சுமி-நாரயணருக்கு இவ்வளவு கோயில்கள் கட்டுகின்றனர் என்றால் அவர்களுடைய ராஜதானி இருந்தது என்பதைப் புரிந்துள்ளனர். மகாராஜா-மகாராணி என்று சொல்லப்படுகின்றது. ஆனால் எப்போது இருந்தனர் என்பதை மறந்து விட்டனர். எவ்வளவு சாதாரணமான பிழை! அதிகக் காலம் ஒன்றும் ஆகிவிடவில்லை. ஐயாயிரம் ஆண்டுகளின் விஷயம். கிறிஸ்து, புத்தர் போன்றோர்க்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் ஆகின்றன. அவர்கள் மறு அவதாரம் எடுத்ததாகச் சொல்கின்றனர். அப்படிப் பார்த்தால் ஒவ்வொருவருமே மறு அவதாரம் எடுக்கின்றனர். ஆத்மா வந்து பிரவேசமாகின்றது, இதுவும் கூட மறு அவதாரம் என்றே சொல்வார்கள். ஆனால் முதலில் பெரியவர்களின் பெயர் மகிமை பாடப்பெறுகின்றது. பரமபிதா பரமாத்மா மறு அவதாரம் எடுப்பார், அப்போது வந்து சரீரத்தில் பிரவேசமாவார் எனச் சொல்லப் படுகின்றது. மறு அவதாரம் என்பதன் அர்த்தம் இது தான். ஆக, பெரும் புகழ் பெற்றவர்களுக்காக இது சொல்லப்படுகின்றது. எப்படி புத்தரின் மறு அவதாரம், கிறிஸ்துவின் மறு அவதாரம் நடைபெற்றது, அதுபோல. பௌத்தர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு பாரதத்துடன் உள்ள தொடர்பு அறியப்படுகின்றது. முஸ்லிம்களோ, எப்போது உசேன் வந்தாரோ அப்போதிருந்தே ஆரம்பமாகி யுள்ளனர். குருநானக்கை ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்குள் தான் காட்டுகின்றனர். அவருக்கும் சிறிய மறு அவதாரம் உள்ளது. அவர்கள் பெரியவர்கள். ஆக, மறு அவதாரத்தை அனைவருமே எடுக்கின்றனர். இப்போது பரமபிதா பரமாத்மாவை அழைக்கின்றனர். ஆனால் அவர் எப்போது வருவார், எப்படி வருவார் என்பதெல்லாம் தெரியாது. சரீரத்திலோ நிச்சயமாக வரவேண்டியுள்ளது. ஆனால் பிறவி எடுக்காத காரணத்தால் அவருக்கு மறு அவதாரம் எனச் சொல்லப்படுகின்றது. சிறிய குழந்தையாகவோ ஆவதில்லை. அனைத்திலும் மிகப் பெரிய மறு அவதாரம் என்று பரமபிதா பரமாத்மாவினுடையதையே சொல்ல முடியும்.. பரமாத்மா 24 அவதாரம் எடுப்பதாகப் பாடுகின்றனர். இப்போது ஒவ்வொரு கல்லிலும் அவதாரம் எடுத்ததாகச் சொல்லி விடுகின்றனர். கீழே தாழ்ந்து கொண்டே இருக்கின்றனர். எப்படி பாரதம் கீழே விழுந்து கொண்டே இருக்கின்றதோ அதுபோல் அவர்களின் சொல்லும் கூட தரம் குறைந்து கொண்டே போகின்றது. பாபா புதிய உலகைப் படைப்பவர். ஆகவே நிச்சயமாகப் புதிய மற்றும் பழைய உலகின் சங்கமத்தில் தான் வருவார். அதை மிகப் பெரிய மறு அவதாரம் என்பார்கள். சிவனுடையது எல்லாவற்றையும் விட மிகப் பெரிய மறு அவதாரம். ஆனால் மனிதர்கள் புரிந்து கொள்வதில்லை, ஏனெனில் பரமாத்மா விடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டு விட்டனர். நிராகார் பற்றிய அறிமுகம் மிக அவசியம். ஆனால் அவர்கள் இதை அறிவதில்லை - பரமாத்மா எப்போது வருகிறார், வந்து என்ன செய்கிறார்? விஷ்ணுவுக்கு மறு அவதாரம் எனச் சொல்ல மாட்டார்கள். தேவி-தேவதைகளுக்கு மறு அவதாரம் எனச் சொல்ல மாட்டார்கள். தேவி-தேவதா தர்மத்தின் ஸ்தாபனை என்று தான்

சொல்வார்கள்.

விஷ்ணு அவதாரத்தின் நாடகம் ஒன்றும் உருவாக்குகின்றனர். உண்மையில் இப்போது விஷ்ணு அவதாரத்தின் விஷயமே இல்லை. நீங்கள் இப்போது விஷ்ணு குலத்தினராக ஆகிக் கொண்டிருக் கிறீர்கள். ஈஸ்வரனுடைய குலம் இருக்கிறது அல்லவா? சிவனின் குழந்தை இந்த பிரம்மா. பிரம்மாவின் குழந்தைகள் நீங்கள். இது ஈஸ்வரிய குலம் எனப்படுகின்றது. பரமபிதா பரமாத்மா சொல்கின்றார், நான் வந்து உங்களை என்னுடையவர்களாக ஆக்குகின்றேன். நான் வந்து குழந்தை களாகிய உங்களுடைய தந்தை ஆகின்றேன். நான் அனைவருக்குமே தந்தை தான். ஆனால் இப்போது நீங்கள் பிரம்மா மூலம் என்னுடையவர்களாக ஆகியிருக்கிறீர்கள். ஆகையால் நீங்கள் என்னை தாத்தா என்கிறீர்கள். ஆத்மாக்களின் தந்தை இருக்கவே செய்கின்றார். அனைவருக்கும் தெரியும், இச்சமயம் நான் வந்திருக்கிறேன். நீங்கள் தான் இப்போது சந்திக்கிறீர்கள். எல்லையற்ற தந்தையை எப்போது சந்திக்கிறீர்களோ அப்போது தந்தை பிறவி கொடுக்கின்றார். இப்போது உங்களை பிரம்மா மூலம் தர்மத்தின் குழந்தைகளாக ஆக்கியிருக்கிறார். விகாரத்தினால் குழந்தை களாக இங்கே ஆகமுடியாது. இவ்வளவு பிரஜைகள் உள்ளனர். சகோதர-சகோதரிகள் எவ்வளவு பேர் இருக்கின்றனர் என்றால் அனைவரும் வாய் வழி வம்சாவளி ஆகிறார்கள் இல்லையா? சந்நியாசி களுக்கு வம்சாவளி இருப்பதில்லை. ஏனெனில் அவர்களிடம் தாத்தா-தந்தையின் எந்த ஒரு தொடர்பும் இருப்பதில்லை. இங்கே தந்தையும் இருக்கிறார், தாத்தாவும் இருக்கிறார். தாத்தா என்று இவர் சொல்லப்படுகின்றார். தந்தை வந்து தம்முடையவர்களாக ஆக்குகின்றார். நீங்கள் அறிவீர்கள், நாம் ஈஸ்வரனின் மடியில் வந்திருக்கின்றோம். இது மங்களமான சந்திப்பு. கலியுகத் தின் கடைசி மற்றும் சத்யுகத்தின் ஆரம்பம் -- இதுவே சங்கமம் எனச் சொல்லப்படு கின்றது. சங்கமத்தில் சந்திப்பு நிகழ்கின்றது. மூன்று நதிகளின் சங்கமம் இருக்கிறதே அது போல. அதில் என்ன நிகழ்கின்றது? குருமார் மற்றும் சிஷ்யர்களின் மங்களகரமான சந்திப்பு நிகழ்கின்றது. அதுவோ தேக சம்மந்தமானதாக ஆகின்றது. ஆத்மா மற்றும் பரமாத்மாவின் மங்கள சந்திப்பு என்று பாடவும் பட்டுள்ளது. இது அனைத்தையும் விட நல்லதாகும். ஆத்மாக்கள் சந்திக்கின்றனர் பரமபிதா பரமாத்மாவுடன். இதில் தண்ணீர் நதியினுடைய விஷயம் இல்லை. இங்கே நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். இது உங்களது மிகப் பெரிய மங்கள சந்திப்பு. ஆத்மாக்களும் சைதன்யமாக உள்ளன. பரமபிதா பரமாத்மா கடனாகப் பெற்ற சரீரம் இது. இது மங்கள சந்திப்பு எனப்படுகின்றது. கும்பமேளா என்று சொல்லப்படுகின்றது இல்லையா? கும்பத்தையும் சங்கமம் என்பார்கள். மூன்று நதிகளின் சங்கமம் கும்பம் என வைக்கப்பட்டுள்ளது. அனைத்திலும் பெரிய சங்கமம் எது? கடல் மற்றும் நதிகளின் சங்கமம். அனைத்திலும் பெரிய நதி பிரம்மபுத்திரா. அதில் பாபா வருகின்றார். அதனால் கடல் மற்றும் பிரம்மபுத்திரா நதிக்கு ஒன்றாகத் திருவிழா உள்ளது. இப்போது கும்பமேளா - சங்கமயுகத்தில். நீங்கள் அனைவரும் ஞானக்கடல் பாபாவுடன் சந்திக்கின்றீர்கள். இதை ஈஸ்வரிய கும்பமேளா என்று சொல்ல முடியும். இது ஆத்மாக்கள் மற்றும் பரமாத்மாவின் சங்கமம். கும்பம் அல்லது சங்கமம் இரண்டும் ஒரே விஷயம் தான். ஆக, குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள், நாம் நமக்காகவே சொர்க்கத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறோம். நாம் வீட்டில் தூய்மையாக இருக்க வேண்டும். எங்கே தூய்மை உள்ளதோ அங்கே

தான் சொர்க்கம் எனச் சொல்வார்கள். குழந்தைகள் தூய்மையாக இருக்கிறார்கள் என்றால் தூய்மை, சுகம், சாந்தி உள்ளது. தேவதைகளுக்கு எப்படி இருக்கின்றதோ அதுபோல உங்களது மனநிலையும் இருக்க வேண்டும். எந்த ஒரு அவகுணமும் இருக்கக் கூடாது. இதைத் தான் சொர்க்கம் என்பார்கள். அதுவே பிறகு நிலையான சொர்க்கமாக ஆகிவிடுகின்றது. வீட்டில் அதுபோல் தகுதியுள்ளவர்களாக ஆகவேண்டும். அதனால் ஒவ்வொரு வீட்டையும் சொர்க்கமாக ஆக்குங்கள் எனச் சொல்லப்படுகின்றது. நீங்கள் மனிதர்களை சொர்க்கத்திற்குத் தகுதியானவர்களாக ஆக்கு கின்றீர்கள். அதனால் உங்களுக்காகவே பாடல் உள்ளது - ஒவ்வொரு வீட்டையும் சொர்க்கமாக மாற்றுங்கள். சத்யுகத்தில் ஒவ்வொரு வீட்டிலும் சொர்க்கம் இருந்தது. இப்போது இல்லை. எந்தக் குழந்தைகள் பாபாவிடம் ஆஸ்தி பெறுகின்றார்களோ அவர்களுக்கு வீட்டில் அமர்ந்தவாறே தூய்மை இல்லாதிருப்பதிலிருந்து தூய்மையாவதற்கான இலட்சியத்தைக் கொடுக்க வேண்டும்.

இது பெரியதிலும் பெரிய சைதன்ய தீர்த்தமாகும். எங்கே கடலாகிய சிவபாபா இருக்கிறாரோ அங்கே ஆத்மாக்களாகிய நதிகள் நீங்கள் நிச்சயமாக இருப்பீர்கள். இது அனைத்தையும் விட உயர்ந்த திலும் உயர்ந்த திருவிழாவாகும். அவையெல்லாம் பக்திமார்க்கத்தின் திருவிழாக்கள். இது ஞானமார்க்கத்தின் திருவிழா. பக்தி மார்க்கத்தின் திருவிழாக்களோ ஒவ்வொரு பிறவியிலும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. ஞான மார்க்கத்தின் திருவிழா ஒரு முறை மட்டுமே நடைபெறுகின்றது. இது ஆன்மீக சந்திப்பாகும். சுப்ரீம் ஆத்மா பரந்தாமத்திலிருந்து வந்து குழந்தை களை சந்திக்கின்றார். எல்லாவற்றைக் காட்டிலும் மிக நல்ல யாத்திரை அல்லது திருவிழா இதுவாகும். இந்தச் சைதன்யக் கடலோ எங்கு வேண்டுமானாலும் செல்ல முடியும். அந்த ஜடமான கடலோ வேறெங்கும் செல்ல இயலாது. நதிகளாகிய நீங்களும் அழைப்பின் பேரில் செல்கிறீர்கள். ஞானக் கடல் இந்த பிரம்மபுத்திரா நதியுடன் செல்கின்றார். நீங்கள் விதவிதமான நதிகள் -- சிலர் தூய்மையாக, சிலர் தூய்மையற்று சில சமயம் அது போன்ற சிலர் வந்து விடுகின்றனர் -- தூய்மையாக அவர்களால் இருக்க முடிவதில்லை. மீண்டும் வருகின்றார்கள் தானே? வெளியில் உள்ள இல்லறத்தாரும் வருகின்றனர். அனுமதிக்கப்படுகின்றனர். அனைவரையும் அனுமதிப்போம் என்பதில்லை. சில உற்றார் உறவினரும் வருகின்றனர். அவர்களை உயர்த்து வதற்காக அனுமதிக் கப்படுகின்றனர். இல்லையென்றால் விதிமுறைகள் நிறைய உள்ளன. இந்திரனின் சபையில் தூய்மையில்லாதவர்கள் யாரும் வர இயலாது. எந்த ஒரு வழிகாட்டியும் (பண்டா) தூய்மை யில்லாத யாரையும் உடன் அழைத்து வரக் கூடாது. அதனால் பாபா சொல்கின்றார், எச்சரிக்கை யாக இருக்க வேண்டும். சர்ட்டிஃபிகேட் உங்களுக்குக் கிடைக்கின்றது. யாரை உடன் அழைத்து வருகின்றீர்களோ அல்லது அனுப்பி வைக்கின்றீர்களோ, பொறுப்பு உங்கள் மீது உள்ளது. சென்டர்களில் அழைப்பும் கொடுக்கின்றனர். எவ்வளவு தூய்மை இல்லாதவர்கள் வந்திருப்பார்கள்! சென்டரில் தூய்மையில்லாதவர்கள் வந்தால் தான் அவர்களை நீங்கள் தூய்மையாக ஆக்குவீர்கள். இங்கோ கடல் அமர்ந்துள்ளார் என்றால் நியமம் வைக்கப்பட்டுள்ளது. நாடி பிடித்துப் பார்க்கப்படுகின்றது. டாக்டர்கள் சர்ஜன்கள் விதவிதமாக உள்ளனர் இல்லையா? மம்மா பாபா மற்றும் முக்கிய குழந்தைகள் பேசு கின்றனர் என்றால் உடனே புத்தியில் பதிகின்றதா? இல்லையா? என்று தெரிந்து விடும். நீங்கள் யாருக்கு

வேண்டுமானாலும் சொல்லிப்புரிய வைத்தால், இரண்டு தந்தையர் உள்ளனர் என்றால் ஏற்றுக் கொள்வார்கள். யுக்தியாகச் சொல்லப் படுகின்றது. பரமபிதா பரமாத்மாவையோ அனைவருமே நினைவு செய்கின்றனர். நாம் இன்ன தந்தையின் சிவபாபாவின் குழந்தைகள். அவருடைய காரியத்தை மட்டும் அறிந்திருக்கவில்லை. இதையோ குழந்தைகளாகிய நீங்கள் புரிந்து கொண்டு விட்டீர்கள் -- அதாவது எந்தெந்த பெயர், ரூபத்தில் மனிதர்கள் வருகின்றார்களோ அதே பெயர் ரூபத்தில் 5000 ஆண்டுகளுக்குப் பிறகு நிச்சயமாக வந்தாக வேண்டும். கிறிஸ்துவின் சித்திரம் (உடலமைப்பு) எப்படி உள்ளதோ அதே போல் அதே சமயத்தில் தான் மீண்டும் இருக்க முடியும். இதுபோல் வேறு எந்த ஒரு மனிதருக்கும் இருக்க முடியாது. கிருஷ்ணருக்கு எந்தச் சித்திரம் உள்ளதோ அது பிறகு வேறு எந்த ஒரு மனித ரூபத்திலும் இருக்க முடியாது. ஆத்மா வெவ்வேறு பெயர் ரூப, தேச, காலத்தில் பிறவி எடுத்து எடுத்து இப்போது பதீத் (தூய்மையற்ற நிலை) ஆகிவிட்டது. அதைப் பிறகு தூய்மையாக்குகின்றார். நீங்கள் அறிவீர்கள், கல்யாண்காரி (நன்மை செய்பவர்) பாபா, அகல்யாண்காரி (தீமை செய்பவர்) இராவணன். அனைவருக்கும் சத்கதி அளிப்பவர் பாபா. பிறகு இதில் மனிதர்களுக்கு மட்டுமென்ன அனைத்துப் பொருட்களுக்கும் சத்கதி கிடைத்து விடுகின்றது. நரகத்தின் வினாசம், சொர்க்கத்தின் ஸ்தாபனை ஆகிவிடுகின்றது. யார் கல்பத்திற்கு முன் வந்திருந்தார்களோ - சிலர் பஞ்சாபி, சிலர் பார்சி வருகின்றார்கள் இல்லையா? அனைவருக்கும் அழைப்புக் கொடுக்க வேண்டும். பாபா வந்திருக்கிறார்--தண்டோரா போடுவதற்கும் தடையில்லை. உங்களுடைய சித்திரங்களும் மிக நன்றாக உள்ளன. இப்போது நீங்கள் கோயிலுக்குத் தகுதியுள்ளவர்களக ஆகின்றீர்கள். இப்போது பூதங்களை வெளியேற்றுவதில் மிகுந்த முயற்சி உள்ளது. லட்சுமி அல்லது நாராயணரை அடைவதற்காக விகாரமான அவகுணங்களை நீக்குவதில் எவ்வளவு முயற்சி செய்ய வேண்டியுள்ளது! சிலருக்குக் காமத்தின் பூதம், சிலருக்குக் கோபத்தின் பூதம், சிலருக்கு மோகத்தின் பூதம் அடி கொடுத்து விடுகின்றன. ஒரேயடியாகக் கீழே விழுந்து விடுகின்றனர். பேராசை வசமாகியும் கீழே விழுந்து விடுகின்றனர். நல்ல-நல்ல வீட்டின் பெண் குழந்தைகள் இனிப்பு வகையான பண்டங்களைப் பார்த்தால் மறைத்துத் தின்பார்கள். பேராசையும் கூட எத்தனைப் பேருக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது! பேராசை வசமாகித் திருடுகின்றனர். முதலில் நீங்கள் பட்டியில் இருந்தீர்கள். இப்போதோ அனைவரும் தங்கள் வீட்டில் பட்டியில் இருக்க வேண்டும். பாபா ஒரே ஒரு பெரிய பட்டி அமைத்தார். இப்போதும் சொல்கின்றார், முதலில் 7 நாள் பட்டியில் இருக்க வேண்டும். இப்போதெல்லாம் சிலருக்கு பட்டியில் இருப்பது கஷ்டமாக உள்ளது. சென்டருக்கு வருகின்றார்கள் என்றால் அவர்களுக்கு நிறத்தை ஏற்றுகின்றீர்கள். பிறகு வீட்டிற்குச் சென்று விட்டால் விடுபட்டு விடுகின்றது. சங்கதோஷம் ஏற்பட்டு விடுகின்றது. இப்போதோ மிகுந்த முயற்சி செய்ய வேண்டியுள்ளது.

இப்போது குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள், நாம் ஈஸ்வரிய குலத்தில் அமர்ந்திருக் கிறோம். தாதா, பாபா, மேலும் நாம் சகோதர-சகோதரிகள். பிராமண குலம் சர்வோத்தமமானது எனப் பாடப் பட்டுள்ளது. அந்த பிராமணர்களுக்கும் நீங்கள் ஞானம் கொடுக்க முடியும் -- பிராமணர்கள் உத்தமமான சிகரம் போன்றவர்கள். இந்த சங்கமயுக பிராமணர்கள்தான் பிறகு தேவதைகளாக ஆகின்றனர். முதலில் தேவதைகளை விட உயர்ந்தவர் கள் பிராமணர்கள். குடுமியோ உயர்ந்தது இல்லையா? பிராமணர்களாகிய நீங்கள்

தேவதைகளுக்குப் பூஜை செய் கின்றீர்கள், உங்களைப் பூஜாரியாக, அவர்களைப் பூஜைக்குரியவர் களாகப் புரிந்து கொண்டிருக் கிறீர்கள். நீங்கள் அந்தப் பூஜாரிகள், பிராமணர்களுக்கும் கூட இதைச் சொல்லிப் புரிய வைக்க முடியும். நீங்களோ உண்மையிலும் உண்மையான சங்கமயுக பிராமணர்கள். நீங்கள் பிரம்மா முகவம்சாவளி. பிறகு நீங்களே தேவதை யாகிறீர்கள். சொர்க்கத்தின் தேவதைகளை நிச்சயமாகப் பரமபிதா பரமாத்மா தான் உருவாக்குவார். நல்லது.

இனிமையிலும் இனிமையான, வெகுகாலம் கழித்துக் காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்குத் தாய்-தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. உள்ளுக்குள் இருக்கும் அவகுணங்களைச் சோதித்தறிந்து அவற்றை வெளியேற்ற வேண்டும். சங்கதோஷத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். தெய்வீக் குணங்களை தாரணை செய்து தன்னை தகுதியானவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

2. ஒவ்வொரு வீட்டையும் சொர்க்கமாக மாற்றுகிற சேவை செய்ய வேண்டும். பூதங்களை பாபாவின் நினைவின் மூலம் விரட்ட வேண்டும். பாபாவுடன் மங்கள சந்திப்பைக் கொண்டாடிக் கொண்டே இருக்க வேண்டும்.

வரதானம் : தன்னுடைய அனாதி சமஸ்காரங்களை எமர்ஜ் செய்து அனைத்து பிரச்சனைகளையும் கடந்து செல்லக்கூடிய பறக்கும் பறவை ஆகுக.

தாங்கள் அனைவரும் அனாதி ரூபத்திலேயே பறக்கக் கூடியவர்கள் ஆவீர்கள், ஆனால், சுமையின் காரணத்தினால் பறக்கும் பறவைக்கு பதிலாக கூண்டுப் பறவை ஆகிவிட்டீர்கள். இப்பொழுது மீண்டும் அனாதி சமஸ்காரத்தை எமர்ஜ் செய்திடுங்கள், அதாவது ஃபரிஷ்தா ரூபத்தில் நிலைத்து இருங்கள், இதைத் தான் சகஜ முயற்சி என்று கூறப்படுகிறது. பறக்கும் பறவை ஆனீர்கள் என்றால் பிரச்சனைகள் கீழேயும் மற்றும் நீங்கள் மேலேயும் சென்றுவிடுவீர்கள். இதுவே அனைத்து பிரச்சனைகளுக்குமான தீர்வு ஆகும்.

சுலோகன்: ஒவ்வொரு அடியிலும் நன்மை அடங்கியுள்ளது எனப் புரிந்துகொண்டு ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அமைதி சக்தியினுடைய தானம் கொடுப்பது தான் உண்மையான சேவை ஆகும்.